# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100


www.tamiledc.com

Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழ் எழுத்துகளில் மிகப்பெருஞ் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர்

அ) வீரமாமுனிவர் ☐ ஆ) கால்டுவெல் ☐

இ) மறைமலையடிகள் ☐ ஈ) ஜி.யு. போப் ☐

2. ஐவகை நிலங்களுள் நீர்வளம் மிகுந்த நிலப்பகுதி

அ) மருதம் ☐ ஆ) குறிஞ்சி ☐

இ) நெய்தல் ☐ ஈ) முல்லை ☐

3. சேரன்செங்குட்டுவனிடம் மலைவாழ்மக்கள் தாங்கள் கண்ட காட்சியைக் கூறினர். இச்சொல்லியத்தின் எழுவாய்

அ) காட்சியை ☐ ஆ) தாங்கள் ☐

இ) சேரன்செங்குட்டுவன் ☐ ஈ) மலைவாழ்மக்கள் ☐

4. ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' என்று கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) தொல்காப்பியம் ☐

இ) திருக்குறள் ☐ ஈ) மணிமேகலை ☐

5. ''மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி'' என்ற பாடல் வரிகளை எமக்களித்தவர்

அ) மகாகவி உருத்திரமூர்த்தி ☐ ஆ) மன்னார்அமுதன் ☐

இ) புதுவை இரத்தினதுரை ☐ ஈ) தாமரைக்கண்ணன் ☐

6. 'ஓடு' என்ற வினையடியுடன் ஆண்பால் விகுதியைச் சேர்த்து எழுதினால்

அ) ஓடுகின்றான் ☐ ஆ) ஓடுவாள் ☐

இ) ஓடின ☐ ஈ) ஓடுகிறது ☐

7. நிலவியற்கையில் முதற்பொருளாக அமைவன

அ) நிலத்திணையும் விலங்குகளும் ☐ ஆ) நிலமும் பொழுதும் ☐

இ) விலங்குகளும் பறவைகளும் ☐ ஈ) தொழிலும் கலையும் ☐

8. சரசுவதி என்ற வடசொல்லின் தூயதமிழ்ச்சொல்

அ) திருமகள் ☐ ஆ) அலைமகள் ☐

இ) கலைமகள் ☐ ஈ) மலைமகள் ☐

9. தேடுவான் என்பதன் எதிர்மறை வினையெச்சம்

அ) தேடிய ☐ ஆ) தேடாத ☐

இ) தேடாது ☐ ஈ) தேடி ☐

10. நன்னூலை எழுதியவர்

அ) தொல்காப்பியர் ☐ ஆ) பவணந்தி ☐

இ) பரணர் ☐ ஈ) வீரமாமுனிவர் ☐

11. இறையன்பு நிறைந்த இலக்கியக் காலத்தில் ஆரியர் மறைத்து வைத்த நூல்களில் ஒன்று

அ) இராமாயணம் ☐ ஆ) சிலப்பதிகாரம் ☐

இ) மகாபாரதம் ☐ ஈ) பிரபந்தம் ☐

12. களப்பிரர் எனும் வடபுலத்தார் தமிழ்நாட்டினுள் நுழைந்த நூற்றாண்டு

அ) கி.பி 2ஆம் நூற்றாண்டு ☐ ஆ) கி.பி 6ஆம் நூற்றாண்டு ☐

இ) கி.பி 9ஆம் நூற்றாண்டு ☐ ஈ) கி.பி 3ஆம் நூற்றாண்டு ☐

13. ஆறித்தேறி என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ ) இரட்டைக்கிளவி ☐

14. யாழ்குடாநாட்டில் கி.மு 300களில் தமிழ் மன்னர்களின் தலைநகரமாக இருந்த இடம்

அ) பூநகரி ☐ ஆ) கதிரமலை ☐

இ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) வன்னி ☐

15. குன்றிலிருந்து அருவி வீழ்கின்ற இடத்தை ____________ என அழைப்பர்.

அ) களப்பு ☐ ஆ) ஏரி ☐

இ) சுனை ☐ ஈ ) ஆறு ☐

16. கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை என்ற பாடல் இடம்பெற்ற காதை

அ) ஊர்காண்காதை ☐ ஆ) மனையறம்படுத்தகாதை ☐

இ) புறஞ்சேரி இறுத்த காதை ☐ ஈ ) வழக்குரைத்த காதை ☐

17. ஈதல் என்பதன் எதிர்ச்சொல்

அ) விழிப்பு ☐ ஆ) மறுமை ☐

இ) குழப்பம் ☐ ஈ ) ஏற்றல் ☐

18. கூதிர்காலத்துக்குரிய மாதங்கள்

அ) மாசி,பங்குனி ☐ ஆ) ஐப்பசி,கார்த்திகை ☐

இ) மார்கழி,தை ☐ ஈ ) ஆவணி,புரட்டாதி ☐

19. மூன்று + மூன்று என்பதைப் புணர்த்தினால்

அ) மும்மூன்று ☐ ஆ) மூன்றுமூன்று ☐

இ) மூமூன்று ☐ ஈ ) முன்மூன்று ☐

20. ஐயம் திரிபறக் கற்றல் என்பதன் மரபுத்தொடர்

அ) தட்டிக்கொடுத்தல் ☐
ஆ) கயிறுதிரித்தல் ☐
இ) துறைபோதல் ☐
ஈ) காலந்தாழ்த்தல் ☐

21. கோடைக் காற்று __________ வீசும்.

அ) வடக்கிலிருந்து ☐
ஆ) கிழக்கிலிருந்து ☐
இ) மேற்கிலிருந்து ☐
ஈ) தெற்கிலிருந்து ☐

22. படித்தனர் என்ற வினைச்சொல்லின் சாரியை

அ) அர் ☐
ஆ) த் ☐
இ) அன் ☐
ஈ) படி ☐

23. மூன்றாம் வேற்றுமைத்தொகை

அ) வாள் எடுத்தான் ☐
ஆ) வாள் வெட்டினான் ☐
இ) பால் குடித்தான் ☐
ஈ) குகைப்புலி ☐

24. இவ்வாண்டு மாரி நன்றாக விளைந்தது. இங்கு வந்துள்ள ஆகுபெயர்

அ) இடவாகுபெயர் ☐
ஆ) குணவாகுபெயர் ☐
இ) காலவாகுபெயர் ☐
ஈ) சினையாகுபெயர் ☐

25. நானிலம் என்பது

அ) வினைத்தொகை ☐
ஆ) உம்மைத்தொகை ☐
இ) உவமைத்தொகை ☐
ஈ) பண்புத்தொகை ☐

புள்ளிகள் 25

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

குறிஞ்சிப் பாடல்களை இயற்றுவதில் மிகச் சிறந்தவர் கபிலர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லக் கபிலர் பாடியது குறிஞ்சிப்பாட்டு. குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளைக் கொண்டது. இது அறத்தொடு நிற்றல் துறையில் அமைந்துள்ளது. அகத்திணை மாந்தர்களின் மன, மண ஒழுக்கங்களைக் களவு, கற்பு என்ற இரு பிரிவுகளில் அடக்கியது. இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றலாகும். ஆரியரின் திருமண முறைகளுக்கும் தமிழரின் திருமண முறைகளுக்கும் உள்ள வேறுபாட்டினை அறிந்துகொள்ள குறிஞ்சிப்பாட்டு உதவுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களின் வழியாகத் தமிழரின் மணமுறைகளாக மரபுவழிதிருமணம், போர் நிகழ்த்திச் செய்யும் திருமணம், பொன், பொருள், நிலம் ஆகியவற்றைக் கொடுத்துச் செய்யும் திருமணம், வீரத்தை வெளிப்படுத்தும் திருமணம் ஆகியவை அவர்களின் திருமணமுறைகளாகக் காணமுடிகிறது. காதலும் வீரமும் தமிழரின் இரு கண்கள் என்பதற்கேற்ப ஏறுதழுவுதல், போர்புரிதல் ஆகிய முறைகளில் தம் வீரத்தை வெளிப்படுத்தினர். குறிஞ்சிப்பாட்டில் வரும் தலைவன் யானையை எதிர்கொண்டு, தன் வீரத்தைத் தான் விரும்பும் தலைவிக்குப் புலப்படுத்துவான். ஒரு குறிப்பிட்ட மலையைச் சார்ந்த தலைவன் ஒருவன் தலைவியை விரும்பினால் செவிலித்தாய் தலைவியின் போக்கில் மாற்றத்தை உணர்வாள். அதனால் அவள் குறத்தியை அழைத்துத் தலைவியின் மாற்றத்துக்குக் காரணம் அறியக் குறி கேட்பாள். குறத்தி குறி கூறுமுன் வழக்கப்படி பல மலைகளையும் பற்றிப் பாடத் தொடங்குவாள். இவ்வாறு குறி கூறுபவளைப் பார்த்து, தலைவனின் மலையை மட்டுமே பாடுவது தாய்க்கு ஐயத்தை உறுதியாக ஏற்படுத்தும். குறத்தி பாடும் பாடலில் மலை என்பதில் உள்ள குறிப்பு தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தைத் தாய்க்கு வெளிப்படுத்திவிடும். களவு வெளிப்பட்ட பின் திருமண ஏற்பாடுகள் தொடங்கிவிடும்.

1. குறிஞ்சிப்பாட்டு எத்துறையில் அமைந்துள்ளது?

---

---

2. குறிஞ்சிப் பாடல்களை இயற்றுவதில் சிறந்தவர் யார்?

---

---

3. தலைவன் எதைத் தான் விரும்பும் தலைவிக்குப் புலப்படுத்துகிறான்?

---

---

4. குறிஞ்சிப்பாட்டு எதற்கு உதவுகிறது?

---

---

5. தமிழர் எவ்வெவ் முறைகளில் தமது வீரத்தை வெளிப்படுத்தினர்?

---

---

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. ''வெந்ததே சிந்தை' என்ற கவிதையில் குறிப்பிடப்படும் இனவழிப்புச் செயல் எது?

______________________________

2. சிறு பொழுதை எத்தனையாக வகுத்தனர்? அவற்றுள் ஒன்றைத் தருக.

______________________________

3. வடக்கிருத்தல் என்றால் என்ன?

______________________________

______________________________

4. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ எது?

______________________________

5. 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் உலகின் முதன்மொழி தமிழென நிறுவியவர் யார்?

______________________________

6. மானவீரத்தில் சோழனுக்கும் சேரனுக்கும் ஏற்றத்தாழ்வின்மையைக் காட்ட எவற்றை உவமையாகக் கையாண்டனர்?

______________________________

7. ''தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன் இன்பத்தை'' இப்பாடலை எழுதியவர் யார்?

______________________________

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1.



2. **காற்றோடு கலந்த எம் மாவீரர்களே**
**கல்லறையில் வாழும் வீரமறவர்களே**

___

___

___

___

___

___

___

___

___

___

___

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

மலையகம் மழைவீழ்ச்சி உடைய பகுதியாதலால் நீர்வளம் மிகுந்து காணப்படுகிறது. அதனால் இங்கு இளந்தென்றல் வீசும் இனிய சோலைகள்; முகில்கள் படர்ந்திருக்கும் வானுற ஓங்கிய மரங்கள்; ஆங்காங்கே மலைகளுக்கிடையே சலசலத்து ஓடும் அருவிகள் போன்ற கண்கொள்ளாக் காட்சிகள் நிறைந்திருக்கின்றன. இங்கு படிக்கட்டுப் பயிர்ச்செய்கையில் விளைபயிர்கள் மதமதத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றன. அருகே பூத்திருக்கும் வண்ணவண்ணப் பூக்களின் நறுமணம் அங்கு போய் வரும் மக்களின் மனதை மகிழ்விக்கின்றது.

1. வினைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________________________

2. உயர்வு நவிற்சியணிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

   ______________________________

3. சுட்டுச்சொல் ஒன்று எழுதுக.

   ______________________________

4. இங்கு இடம்பெற்றிருக்கும் உரிச்சொல் ஒன்று தருக.

   ______________________________

5. விளைபயிர்கள் மதமதத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றன.
   இச்சொல்லியத்தை இறந்தகாலச் சொல்லிமாக மாற்றி எழுதுக.

   ______________________________

6. இரட்டைக்கிளவி இரண்டு எழுதுக.

   ______________________________

7. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________

8. ‘அஃறிணைப் பன்மைச் சொற்கள் இரண்டு எழுதுக.

______________________________

9. படர்ந்திருக்கும் என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

______________________________

10. ஓடும் அருவிகள். இதில் இடம்பெற்றுள்ள இடைச்சொல்லைத் தருக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.**

மெய்முன் உயிர் புணர்தல் ______________________

முன்னிலைப் பன்மை வினைமுற்று ______________________

தொடர்மொழி ______________________

புள்ளிகள் 03

**2. கலப்புச்சொல்லியம் ஒன்று எழுதுக.**

______________________________

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

காவோலை நண்பனை

கழுதை வாசனை

ஆபத்தில் அன்பான அறியலாம் தளம்பாது

குருத்தோலை கற்பூர

கொடியும் சிரிக்குமாம்

அடம்பன் விழக் மிடுக்கு திரண்டால்

அறியுமா நிறைகுடம்

1. எல்லாருக்கும் முதுமை வரும்.

---

2. சிறப்பு அறியா இயல்பு.

---

3. உயர்ந்த நட்பு.

---

4. அறிவின் அடக்கம்.

---

5. ஒற்றுமையே வலிமை தரும்.

---

புள்ளிகள் 05

## 7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. மன்னன் ____________________ பூட்டிய தேரில் மக்களைக் காணச் சென்றான். மன்னனிடம் மக்கள் கள்வர்கள் தமது பொருட்களை வழிப் ____________________ செய்கிறார்கள் என்று கூறினர்.

   ( பறி, பரி )

2. ____________________ படிந்த பற்களை உடைய முதியவர் மெல்லமெல்ல நடந்து வந்தார். முதியவர் சிறுவனுக்குக் கல்வி ____________________ காண முடியாத பெருங்கடல் என்று கூறினார்.

   ( கரை, கறை )

3. மீனவனின் மனைவி ____________________ சோற்றுப் பொதியுடன் கடற்கரைக்குச் சென்றாள். மீனவன் சோற்றுப் பொதியைக் ____________________ உண்டான்.

   ( குழைத்த, குலைத்து)

4. சேந்தன் வெள்ளை நிறத்தில் பூத்துக் குலுங்கிய ____________________ மலர்களைப் பார்த்து மகிழ்ந்தான்.அவன் தனது காலில் குத்திய ____________________ மெதுவாகத் தட்டி எடுத்தான்.

   ( முல்லை, முள்ளை )

5. நீண்ட ____________________ கொண்ட கொக்குகள், பெரிய மீன்களைப் பிடிக்க ஒற்றைக் காலில் நிற்கின்றன. கார்முகிலைக் கண்ட ____________________ மயில்கள் தோகை விரித்து ஆலுகின்றன.

   ( அழகு, அலகு )

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. அறனெனப் பட்டதே ____________________ அஃதும்

   பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

   ( பெருவாழ்க்கை,  இல்வாழ்க்கை,  நல்வாழ்க்கை )

2. பழியஞ்சிப் ____________________ உடைத்தாயின் வாழ்க்கை

   வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

   ( கற்றூண்,  நற்றூண்,  பாத்தூண் )

| புள்ளிகள் 05 |
|---|

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தென்றல் வரவு
- ✸ தமிழர் வீரம்
- ✸ நோயிலிருந்து எம்மைக் காக்க நாம் கடைப்பிடிக்க வேண்டிய உணவுமுறைப் பழக்கங்கள்
- ✸ புலம்பெயர் நாடுகளில் நடைபெறும் மாவீரர் நாள் பற்றி உமது நண்பனுக்கு ஓர் அஞ்சல் எழுதுக.

புள்ளிகள் 15